1984 பிப்ரவரி 23]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

8. அறிவிப்பு.

பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்படுகிறது என்பதைப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

24—2—1984 (1) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

(2) அரசினர் தனித்தீர்மானமும், அரசினர் சட்டமுன்வடிவுகளும் எடுத்துக் கொள்ளப்பெறும்.

(3) தேவையிருப்பின், பேரவை மாலையில் கூடும்.

பேரவை 24—2—1984 அன்று ஒத்திவைக்கப்பெறும்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள்—(தொடர்ச்சி).

(ஆ) திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன் வடிவு 1984.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1984)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

இந்தச் சட்டமுன்வடிவு இங்கே தமிழிலும், ஆங்கிலத்திலும் வைக்கப்பெற்று இருக்கிறது. அதிலே தமிழ் படிவத்திலே ஒரு சிறிய திருத்தம் இருக்கிறது. அதைத் தங்கள் மூலம் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தச் சட்டத்தின் காரண-நோக்க விளக்கத்தில் '' ஒரு ஆண்டில் 9 மாதங்களுக்கு மேற்படாத கால அளவிற்கு '' என்று இருப்பதற்குப் பதிலாக, '' ஓராண்டில் 9 மாதங்களேனும் '' என்று அச்சடிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, '' ஒரு ஆண்டில் 9 மாதங்களுக்கு மேற்படாத கால அளவிற்கு '' என்று அதைத் திருத்திப் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

---

*1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18-ம் தேதியே தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.